கர்த்தர் காண்பித்த அதிசயங்களை மறந்துபோக மாட்டேன்

I Will Not Forget Thy Wonders

Album 20 Song 5

Song 5 – கர்த்தர் காண்பித்த அதிசயங்களை மறந்துபோக மாட்டேன்

Psalm 78 – Not forgetting God's wonders, telling fathers' stories to next generations, so they hope in God and keep His commands. Echoes Deuteronomy 6:6–9 (teach diligently).

கர்த்தர் காண்பித்த அதிசயங்களை மறந்துபோக மாட்டேன்
அவருடைய செயல்களையும் மறந்து போக மாட்டேன்
யுத்தநாளிலே புறமுதுகை நான் காட்ட மாட்டேன்
தேவனே உம் உடன்படிக்கையை கைக்கொண்டிருப்பேன்

எங்கள் பிதாக்களின் கண்களுக்கு முன்பாக
எகிப்துதேசத்திலே அதிசயங்கள் செய்தாரே
கடலைப் பிளந்து ஜலத்தை குவித்து
பிதாக்களை தேவன் கடக்க செய்தாரே

பகலிலே மேகத்தினாலும் இரவிலே அக்கினியாலும்
வனாந்தரத்திலே நடத்திச் சென்றீரே
கன்மலையைப் பிளந்து தண்ணீரை குடிக்கக்கொடுத்து
நீரை நதிபோல ஓடிவரச் செய்தாரே

பிதாக்களின் இச்சைக்கேற்ற போஜனத்தைத் கேட்டார்கள்
தங்கள் இருதயத்திலே தேவனைப் பரீட்சைப் பார்த்தனர்
தூதர்களின் அப்பத்தை மனுஷனுக்கு கொடுத்தார்
தென்றலை வீசச்செய்து மாம்சத்தையும் கொடுத்தார்

வானத்தின் தானியமாம் மன்னாவை உண்டிருந்தும்
சிறகுள்ள பறவைகளைத் தின்று கொழுந்திருந்தும்
தேவனை நம்பாமல் பின்னும் பாவம் செய்தனர்
தேவனின் கோபத்தாலே பலரும் மடிந்தனர்

ஜனங்களோ திரும்பிவந்து தேவனைத் தேடினர்
தேவனே கன்மலையும் மீட்பரும் என்றனர்
ஆனாலும் தங்கள் நாவால் பொய்களை சொன்னர்கள்
அநேகந்தரம் தமது கோபத்தை விலக்கிவிட்டார்.

KJC-DNN


I Will Not Forget
Thy Wonders
Album 20 Song 5